புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நெறிஞ்சிக்குடி ஊராட்சி, கூடுதலைப்பட்டியில், ஒன்றியப் பொது நிதி திட்டத்தின்கீழ் ரூ.6 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கம் கட்டடத்தை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

திராவிட நாயகரின் ஆட்சியில் தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் முதலிடம்!

திருவாரூர் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!

திருவாரூர், அக்.21-

திருவாரூர், அக்திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாரிமுத்து எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அப்போது தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திராவிட நாயகன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டு தல்களின்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து இதுபோன்ற முதலமைச்சரின் திட்டம் சார்ந்த ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் மக்களை சென்றடைவதை உறுதிசெய்யும் வேலையினை மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் செய்து வருகிறோம். அந்தவகையில், இன்றைய தினம் திருவாரூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் மற்றும் அனைத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த பல தொழில்களையும் இங்கு கொண்டு வந்து, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை மதிப்புக் கூட்டி, அதன் மூலம் விவசாயிகளுக்கு வருமானத்தை பெருக்கும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் திருவாரூர் மாவட்டமானது மாநிலத்தில் முதலிடம் வகிக்கும் மாவட்டமாக மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் நிச்சயமாக உள்ளது. அதற்கான பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்துவருகிறார்கள்.

திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாவட்டத்தில் 176 தாழ்வான பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளது. 235 நிவாரண மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.41 அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகள், 68 மிதமான பாதிப்படையக்கூடிய பகுதிகள் எனவும், 67 குறைந்த பாதிப்படையக்கூடிய பகுதிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மை இடுப்பொருட்கள் போதிய அளவு இருப்பு உள்ளது. அதேபோல் ரேசன் பொருட்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் மூலம் யு மற்றும் டீ பிரிவு வாய்க்கால்கள் ஆய்வு செய்யப்பட்டு தூர்வாரப்பட்டுள்ளது. 11,000 மணல் மூட்டைகள் தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மாவட்டத்தில் தலைமையிடத்தில் அமைக்கப்பட்டுள்ள அவசரகால உதவி எண் 1077, 04366 226623 மற்றும் வாட்ஸ்அப் எண்: 9488547941 எண்ணிற்கு பொதுமக்கள் தங்கள் புகார்களை தெரிவிக்கலாம். தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை தேவை ஏற்படின் நிவாரண மையங்களில் தங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. பழுதடைந்த மற்றும் பாதுகாப்பற்ற கட்டிடங்களில் யாரும் உபயோகப்படுத்தாத வண்ணம் உரிய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் போதுமான அளவு தார்ப்பாய்கள் கையிருப்பு வைத்திருக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து திருவாரூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலாக்கம் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

ஒன்றியக்குழுத்தலைவர்கள், புலிவலம்ஏ.தேவா, சோம.செந்தமிழ்செல்வன்,உமாராணி பாலச்சந்திரன், நகர்மன்ற தலைவர்கள் மன்னை.த.சோழராஜன், கவிதாபாண்டியன், மும்தாஜ் நவாஸ்கான், பாத்திமா பஷீரா, புவனப்ரிய செந்தில். மகாலெட்சுமி முருகேசன் ராஜா பக்கிரிசாமி, ராமராஜன் மற்றும் அனைத்துதுறை உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திருக்குவளைக்கு - உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வருகை!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, அக்.21-

நாகை மாவட்டம் திருக்குவளை உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த இல்லத்திற்கு உயர் கல்வித் துறை அமைச்சராக பொறுப்பு ஏற்றுள்ள கோவி.செழியன் வருகை தந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான கழக அரசில் புதிதாக பொறுப்பு பொறுப்பு ஏற்றுள்ள உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த இல்லத்திற்கு வருகை தந்தார். கலைஞர் இல்லத்திற்கு வருகை தந்த உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியனுக்கு நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என். கௌதமன் தலைமையில் வரவேற்பு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கலைஞர் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முன்னதாக கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகம், தந்தை முத்துவேலவர் ஆகியோர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.இராமலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், க.ராஜேந்திரன், க. மறைமலை, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆ,தாமஸ்ஆல்வாஎடிசன், சோ.பா.மலர்வண்ணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என். ஆனந்த், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், கோசி.குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் பி.தியாகராஜன், செந்தில், வி.எம். கே.பாலாஜி, லோகு, சண்முகராஜ், குவளைகணேசன், சண்முகநாதன், ஒன்றிய நிர்வாகிகள் பார்த்திபன், சுரோஷ், ஜெயந்திமாசி மாணி, கிளை செயலாளர் குண்டூர் சண்முகம் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சிவபாலன், சுதாஅருணகிரி மற்றும் ஒன்றிய, கிளைக் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

முதல்வருக்கு - பொது நூலகத் துறை பணியாளர் கழகம் நன்றி!

மாநிலத் தலைவர் மு.ராஜேஷ்குமார் அறிக்கை!

சென்னை, அக்.21-

தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழகம் சி அண்ட்டி மாநிலத் தலைவர் மு.ராஜேஷ்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு 3% அகவிலைப் படி உயர்வு அறிவித்தவுடன் தமிழ் நாடு அரசு பணியாளர்களுக்கு 3 % (50% ல் இருந்து 53%) அகவிலைப் படியை உயர்த்தி ஜூலை மாதம் முதல் நிலுவைத் தொகையுடன் வழங்க முதல்வர் அவர்கள் முன் தேதியிட்டு அறிவித்துள்ளார்கள்.

இதனால் சுமார் 16 லட்சம் அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பயனடைகின்றார்கள். 16 லட்சம் பணியாளர் குடும்பங்களின் சார்பாகவும், பொது நூலகத்துறை பணியாளர் கழகம் சி & டி சார்பாகவும் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தரமான பொருட்களை வழங்குவதே ஆவினின் நோக்கம்!

சென்னை, அக்.21-

தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

FSSAI அதிகாரிகள் கடந்த மார்ச் மாதம் தேனி மாவட்ட பால் பண்ணையை ஆய்வு செய்து சில அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டது. அதை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டு பதில் விளக்கம் கொடுக்கப்பட்டது.

அதற்கு பின்பு எந்த ஆய்வுக்கும் FSSAI அதிகாரிகள் தேனி பால்பண்ணைக்கு வரவில்லை. தற்பொழுது வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

தேனி ஆவினில் பால் கோவா மற்றும் பாதாம் பவுடர் மட்டுமே வாரத்தில் ஒரு நாள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வருகிறது. தீபாவளி பண்டிகைக்கு இனிப்பு மற்றும் காரவகைகள் திண்டுக்கல் மற்றும் மதுரை ஆவினில் இருந்தே வருகிறது. தேனி ஆவினில் தீபாவளி இனிப்பு வகைகள் தயாரிக்கப்படுவதில்லை.

ஆவினின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதற்காக சிலர் வேண்டுமென்றே பழைய செய்திகளை பரப்பி வருகின்றனர். தரமான பொருட்களை சரியான விலையில் வழங்குவதே ஆவினின் நோக்கம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரூர் தாந்தோணி அரசு கலைக் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீவைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, தேர்வானவர்களுக்கு பணி நியமன உத்தரவுகளை வழங்கினார். உடன் கரூர் மாவட்ட கலெக்டர் மீ தங்கவேல், கரூர் தொகுதி எம்.பி. செ. ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம் குளித்தலை, ஆர் இளங்கோ அரவக்குறிச்சி, கே சிவகாமசுந்தரி கிருஷ்ணராயபுரம், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன் மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன் கோவை மண்டல வேலைவாய்ப்புத்துறை இணை இயக்குனர் ஆ.ஜோதிமணி, மண்டல குழு தலைவர் எஸ்.பி.கனகராஜ், ஆகியோர் உள்ளனர்.

பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று

புத்தகம் கட்டுநர் பயிற்சிக்கான அரசாணை விலக்கிக் கொள்ளப்பட்டது!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, அக். 21-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளின் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று, நேற்று முன்தினம் (19.10.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில் நடந்த பேச்சுவார்த்தையின் முடிவில் அரசாணை நிலை எண். 21, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-1.1)த் துறை, நாள். 20.09.2024, விலக்கிக் கொள்ளப்பட்டது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், நேற்று முன்தினம் (19.10.2024) சென்னை, தலைமை செயலகத்தில் தமிழ்நாடு பார்வை மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது சம்பந்தமாக செய்தியாளர்களிடம் தெரிவித்தது வது:-

தமிழ்நாடு பார்வை மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு என்பது சற்று ஏறக்குறைய 10க்கும் மேற்பட்ட பார்வை குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் ஒருங்கமைப்பு ஆகும். அந்த வகையில் இந்த கூட்டமைப்பின் பிரதான கோரிக்கை பூவிருந்தவல்லி யில் உள்ள பார்வையற்றோருக்கான அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் புத்தகம் கட்டுநர்கான பயிற்சி 21 நபர்களுக்கு வருடாவருடம் தரப்பட்டு வந்ததை நிறுத்தக்கூடாது என்பதாகும். இன்றைக்கு நூலக துறையை பொருத்தவரை, நவீன காலத்திற்கேற்ப மின் நூலகங்கலாகவும், நூல்கள் மின் மயமாக்கும் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அரசு அச்சகத்தில் நவீன ரக இயந்திரங்கள் நிறு வப்பட்டுள்ளதால், குறிப்பாக Gathering, Wire Stitching, Perfect Binding, Cutting Machine, Automatic Sewing, Automatic Folding, Collator Machine, Cover Punching Machine, Coating Machine போன்ற பல்வேறு அதிநவீன இயந்திரங்கள் பயன்பாட்டில் இருக்கின்ற காரணத்தினாலும் இந்த நூல் கட்டுநர் பயிற்சியை முடித்த பார்வையற்ற நபர்கள் இந்த நவீன இயந்திரங்களை இயக்க இயலாது என சம்பந்தப்பட்ட துறையினர் தெரிவித்ததாலும், இந்த பயிற்சிக்கான தேவை வழக்கொழிந்துவிட்டதாக கருதப்பட்டு, இதற்கு மாற்றாக பார்வையற்றோர்க்கு உகந்ததாக உள்ள பயிற்சியை வழங்க சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை முடிவெடுத்து, இப்பயிற்சியினை நிறுத்த அரசாணை பிறப்பித்தி ருந்தது. இதற்கு தமிழ்நாடு பார்வை மாற்றுத்திறனாளிகளின் கூட்டமைப்பு தங்களின் எதிர்ப்பை பதிவு செய்திருக்கிறார்கள். ஆண்டொன்றுக்கு குறைவான அளவுக்கு ஒரு 21 பேர் மட்டுமே பயிற்சி பெறுகிறார்கள் என்றாலும், அது எங்களுக்கென்று இருக்கின்ற ஒரு பிரத்யேகமான பயிற்சி, அதை நிறுத்திட கூடாது என்கிற வகையில் தங்களுடைய கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கோரிக்கை வைத்தது மட்டுமல்லாது இது சம்மந்தமாக நீதிமன்றத்தையும் அணுகியிருக்கிறார்கள். இந்த நிலையில் வெளியிடப்பட்டிருந்த அரசாணையில் ஒரு நான்கு ஐந்து இடங்களில் அதற்கான காரணங்கள் சொல்லப்படுகிற போது அது பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளின் மனதை புண்படுத்துவதாக இருப்பதாக சம்மந்தப்பட்ட நம்முடைய கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது. இது சம்மந்தமான செய்தி இன்று காலை அறிந்தவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு இவ்வரசு பாதுகாப்பு அரணாக உள்ளது என்பதாலும் சமூக நலத்துறையின் கீழ் இயங்கி வந்த மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தன்வசம் வைத்துக்கொண்டுள்ளதாலும் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு வகையில் உதவ வேண்டும் என்ற நேசமனப்பான்மையோடு இருப்பதாலும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகிய என்னை இந்த கூட்டமைப்புடன் பேச பணித்தார்.

அதன்படி இக்கூட்டமைப்பினருடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போது ஒன்றிய அரசால் மாற்றுத்திறனாளிகளுக்காக ரூ.1225 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில், வேறு எங்கும் எப்போதும் இல்லாத அளவிற்கு 2024-25ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசால் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1370 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருந்ததை சங்க உறுப்பினர்களே பாராட்டினார்கள்.

தமிழ்நாட்டைப்போல வேறு எந்த மாநிலத்திலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தோழமையோடு, நேச உணர்வோடு எந்த மாநிலமும் இல்லை என்பதை அவர்களுமே ஒப்புக் கொண்டார்கள். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் மனது புண்படக்கூடாது என்பதை கருத்தில்கொண்டு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் உயர் அலுவலர்களுடனும், சம்மந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பினருடனும் இணைந்து பேசினோம். சம்மந்தப்பட்ட கூட்டமைப்பினர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு எத்தகைய சேவையினை வழங்கி வருகிறார்கள் என்பதை பட்டியலிட்டு சொன்னார்கள். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு விருதுகள் வழங்கப்படும்போது ஒரிஜினல் தங்கத்தில்தான் 10 கிராம் அளவில் தங்க பதக்கங்களை தமிழ்நாட்டில் தருகிறார்கள், ஒன்றிய அரசின் விருதுகள் கோல்டு பிளேட்டட் ஆகத் தான் தரப்படுகிறது. அது ஓரிரு மாதங்களில் கருத்துவிடுகிறது என்கின்ற செய்தியினையும் சொன்னார்கள். மாற்றுத்திறனாளிகளின் நலனை ஒரு குறிக்கோளாக வைத்திருக்கும் இவ்வரசு பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளின் மனதை புண்படுத்தும் சில அம்சங்கள் உள்ளடக்கிய இவ்வரசாணையை திரும்ப பெற்றுக்கொள்ள கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து இந்த அரசாணை என்பது திரும்ப பெற்றுக்கொள்ளப்படுகிறது என தெரிவித்தோம். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். மேலும் சென்னை உயர்நீதிமன்றத்தில் இதுதொடர்பாக தொடரப்பட்ட பொதுநல மனுவினை திரும்ப பெறுவதாக தேசிய பார்வையற்றோருக்கான கூட்டமைப்பின் தலைவர் மனோகரன் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதோடு அவர்கள் இன்னொரு கோரிக்கையினையும் வைத்தார்கள். பேருந்துகளில் எங்களுக்கு இலவச பயணம் என்பது இருக்கின்றது, அப்படி பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும்போது நடத்துனர்கள் ஆன்லைனில் பதிவு செய்திருக்கிறீர்களா? என்று கேட்கிறார்கள், மகளிர் இலவசமாக செல்லும் போது எந்த கேள்வியும் கேட்பதில்லை, எங்களிடம் மட்டும் இந்த கேள்வி கேட்கிறார்கள் என்கின்ற வகையில் கோரிக்கையினை சொன்னார்கள், நானும் உடனடியாக சம்மந்தப்பட்ட துறை அமைச்சரிடம் கேட்டபோது அவர்களும் இதற்கு ஒரு சுமூக தீர்வு காணப்படும் என தெரிவித்தார்கள். அதோடுமட்டுமல்லாமல் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் மகிழ்ச்சி தருகின்ற வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மிக விரைவில் இந்த சங்கத்தினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து நன்றியும் சொல்லவிருக்கிறார்கள்.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி.சிஜி தாமல் வைத்யன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திருமதி.எம்.லக்ஷ்மி, மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை,அக். 21-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் வருகின்ற 24.10.2024 வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ்ச்செல்வன் அவை கூடத்தில்

மாவட்ட அவைத்தலைவர்அரு.வீரமணி தலைமையில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்,

புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் வண்ணை அரங்கநாதன், விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளரும், தஞ்சை துணை மேயர் அஞ்சுகம் பூபதி, , கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக்கேயன் என். வேல்ச்சாமி ஆகியோர் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர். எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ.

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு,

கவிச்சுடர் கவிதைப் பித்தன் , மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி. என். மணி, சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ்,

எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், ஆ.செந்தில் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

பொருள்: தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம். வாக்காளர் பட்டியல் சரிப்பார்த்தல், அக்29 முதல் நவ 28 வரை பெயர் சேர்த்தல், நீக்கம் OMR படிவம் குறிப்பேடு. சார்பு அணிகளின் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் பட்டியல். கழக ஆக்கப்பணிகள்.